# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 68/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 08.01.2026.**

| | |
|---|---|
| **Name : நடேசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஜலகண்டாபுரத்தில் குடியிருந்து தேங்காய் வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த ஓர் ஆண்டிற்கு முன்பாக காலை 9 மணிக்கு மேல் நான் வீட்டிற்கு உள்ளே இருந்த போது சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்த போது அடிப்பட்ட நபரை ஆம்புலன்ஸ் மூலமாக எடுத்துச் சென்றதாக தெரிந்து கொண்டேன். நான் கேட்ட வகையில் ஸ்கூட்டி மீது வேறு வாகனம் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) கடந்த 05.12.2024ம் தேதி காலை 08.15 மணிக்கு நான் என் பீடா கடை அருகே கந்தசாமி என்பவர் கடைக்கு வருவதற்கு சாலையை இருபுறமும் பார்த்துவிட்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கடந்து ரோட்டின் ஓரத்திற்கு வந்தார் என்றால் நான் பார்க்கவில்லை. அப்போது ஜலகண்டாபுரம் அரச மரத்திலிருந்து நங்கவள்ளி சாலையில் நங்கவள்ளியிலிருந்து தெற்கிலிருந்து

வடக்காக வந்த TN 93 F 9348 Suzuki AVNIS என்ற இரு சக்கர வாகனம் வேகமாக வந்து கந்தசாமி மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் நான் பார்க்கவில்லை. பிறகு தான் தெரிந்து கொண்டேன். தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**